காணொலிக் காட்சி வாயிலாக

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்

## பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம் இன்று (05.08.2023 - சனிக்கிழமை) காலை 10.30 மணி அளவில், காணொலிக் காட்சி வாயிலாக நடைபெறுகிறது. அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்: தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா.**

**துரைமுருகன்,**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை -600 018

தமிழ்நாட்டில்

## வெயில் அதிகரிக்கும்!

சென்னை,ஆக.5-

தமிழகத்தில் வெயில் அதிகரிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இயல்பிலிருந்து 2 3 டிகிரி செல்சியஸ் அதிகமாக இருக்கக்கூடும். அதிக வெப்பநிலை மற்றும் அதிக ஈரப்பதம் இருக்கும் பொழுது வெப்ப அழுத்தம் காரணமாக அசௌகரியம் ஏற்படலாம்.

## புதுச்சேரி முதல்வர் என்.ரங்கசாமி பிறந்தநாள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



சென்னை, ஆக,5-

புதுச்சேரி முதலமைச்சர் என்.ரங்கசாமி அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**புதுச்சேரி முதலமைச்சர் என்.ரங்கசாமி அவர்களது பிறந்தநாளில் அவர் என்றும் மகிழ்ச்சியுடனும் நல்ல உடல்நலத்துடனும் திகழ எனது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை கடற்படைத் தாக்குதலால் படகுகள் சேதமடைந்து வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட

## மீனவர்களின் நலனுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன..?

### மக்களவையில் ஆ.ராசா கேள்வி!



புதுடெல்லி, ஆக.5 -

கடலில் மீன்பிடிக்கச் செல்லும் அப்பாவி தமிழ்நாட்டு மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துவதும், கைதிகளாக பிடித்துச்செல்வதுமான சம்பவங்களால் மீனவர் குடும்பங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு தவிப்பதை தடுக்க ஒன்றிய அரசு மேற்கொண்ட ராஜாங்க நடவடிக்கைகள் என்ன என்று நாடாளுமன்ற மக்களவையில் ஆ. ராசா கேள்வி எழுப்பினார்.

அது குறித்த விபரம் வருமாறு :

(அ) தமிழ்நாட்டு மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் மேற்கொள்ளும் தாக்குதல் நடவடிக்கைகள் அதிகரித்து வரும் நிலையில் இப்பிரச்சினையைச் சமாளிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

(ஆ) படகுகள் சேதமடைந்த மீனவர்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து பரிசீலிக்கப்பட்டுள்ளதா, அப்படி யானால் அதன் விவரங்கள் என்ன ?

(இ) தொடர்ந்து வரும் இந்தப் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காண, அவற்றை விவாதித்து முடிவு எட்டப்படும் வகையில் மீன்வளத்துறையினரின் கூட்டுப் பணிக்குழுக் கூட்டம் கூட்டப்பட்டதா?

(ஈ) அப்படியானால் அதன் விவரங்கள், இல்லையென்றால் அதற்கான காரணம் என்ன?

மேற்கண்ட கேள்விகளுக்கு ஒன்றிய அரசின் வெளிவிவகாரத்துறை இணைய மைச்சர் வி. முரளிதரன் எழுத்துப்பூர்வமாக அளித்த பதில் வருமாறு :

(அ) முதல் (ஈ) வரை : இந்திய மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்கு இந்திய அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. இந்திய பிரதமர், இலங்கை பிரதமருடனான உயர்மட்ட சந்திப்புகளில் மீனவர் பிரச்சினை பற்றி எடுத்துச் சொல்லியுள்ளார். மீனவர்கள் பிரச்சினையை முற்றிலும் மனிதாபிமான மற்றும் வாழ்வாதார பிரச்சினையாக கருதுமாறு இலங்கை அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், எந்த சூழ்நிலையிலும் தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருக்க இரு தரப்பினரும் உறுதியளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மீனவர்கள் பிரச்சினைகள் தொடர்பாக மீன்வளத்துறையினரின் கூட்டுப் பணிக்குழுக் கூட்டங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இரு தரப்பினருக்கும் இடையில் 2022 மார்ச் மாதம் மீன்வளம் தொடர்பான கூட்டுப்ப ணிக்குழுக் கூட்டம் (JWG) நடைபெற்றது. இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு கலந்தாலோசனை நிகழ்ச்சி நிரலுக்கேற்ப மீனவர்கள் மற்றும் மீன்பிடி படகுகள் தொடர்பான பிரச்சினை உட்பட மீன்பிடி த்தலில் உள்ள அனைத்து பிரச்சினைகள் குறித்தும் கூட்டு பணிக்குழு விரிவாக விவாதித்து ள்ளது.

## பத்திரிகையாளர்களுக்கு நிதி உதவி உண்டு; வீட்டுமனை வழங்கும் திட்டம் இல்லை!

### டாக்டர் கனிமொழிஎன்.வி.என். சோமு கேள்விக்கு ஒன்றிய அரசு பதில்!



புதுடெல்லி, ஆக. 5-

நோய் மற்றும் விபத்து காரணமாக உயர்சிகிச்சை தேவைப்படும் அல்லது உயிரிழக்கும் பத்திரிகையாளர்கள் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறதா? அங்கீகார அட்டை இல்லாத பத்திரிகையாளர்களுக்கும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுமா? அவர்களுக்கு சலுகை விலையில் வீடோ வீட்டுமனையோ வழங்கும் திட்டமிருக்கிறதா? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு ஒன்றிய செய்தி ஒலிபரப்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் அளித்த பதில்:

பெரும் நோய்களால் அவதிப்படும் பத்திரிகையாளர்களுக்கு உயர் சிகிச்சைக்காகவும், விபத்தால் உயிரிழப்புக்கோ, நிரந்தர முடக்கத்திற்கோ ஆளாகும் பத்திரிகையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு ஒரு முறை நிவாரணமாகவும் நிதி உதவி பத்திரிகையாளர்களுக்கான நலத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

மத்திய மாநில அரசுகள் மூலம் அங்கீகார அட்டை பெற்ற பத்திரிகையாளர்கள் மட்டுமின்றி, அந்த அட்டை இல்லாத பத்திரிகையாளர்களுக்கும் இந்த நிதி உதவி வழங்கப்படுகிறது.

பத்திரிகையாளர்களுக்கு வீட்டு மனையோ, சலுகை விலையிலான வீடுகளோ அளிக்கும் திட்டம் எதுவும் ஒன்றிய அரசிடம் இல்லை. பத்திரிகையாளர்களுக்கு பென்ஷன் வழங்கும் விஷயம் என்பது அவர்கள் பணிபுரியும் நிறுவனத்தின் நடைமுறைகளுக்கு உட்பட்டது. இதில் அரசுக்கு எந்தத் தொடர்பும் இல்லை.

இவ்வாறு அனுராக்தாக்கூர் பதிலளித்தார்.

ராமேஸ்வரம் – தலைமன்னார்

## படகுச் சேவை தொடங்க 27.32 கோடி முன்மொழிவு பெறப்பட்டு உள்ளது!

### மயிலாடுதுறை இராமலிங்கம் எம்.பி. கேள்விக்கு - ஒன்றிய அமைச்சர் பதில்!



மயிலாடுதுறை, ஆக.5-

மயிலாடுதுறை எம்.பி. இராமலிங்கம் நாடாளுமன்றத்தில், தமிழ்நாடு மற்றும் இலங்கை இடையே படகு சேவை தொடங்குவதற்கு, அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளதா என்றும், அரசாங்கத்தால் அடுத்தடுத்து வழங்கப்பட்ட ஒப்புதல்களின் விவரங்கள் மற்றும் தமிழக அரசு கோரியபடி, படகு சேவை திட்டத்திற்கு நிதியுதவி அளிக்க ஒன்றிய அரசு உடன்படுகிறதா? என்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன? என்று கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்துறை அமைச்சர் சர்பானந்தா சோனாவாலுக்கு கேள்விகள் எழுப்பியிருந்தார்.

அதற்கு துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்துறை அமைச்சர் சர்பானந்த சோனோவாலின் பதில் வருமாறு:-

தமிழ்நாடு மற்றும் இலங்கை இடையே படகு சேவை தொடங்குவதற்கு அரசு கொள்கை ரீதியாக ஒப்புதல் அளிக்கவில்லை.

ராமேஸ்வரத்திலிருந்து (இந்தியா) தலைமன்னாருக்கு (இலங்கை) 26 கடல் மைல்கள் தூரத்திற்கு பயணிகள் படகு போக்குவரத்து சேவை உடனடியாக தொடங்க ரூ. 27.32 கோடி மதிப்பீட்டில் ராமேஸ்வரத்தில் உள்கட்டமைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய வசதிகளை மேம்படுத்த, தமிழ்நாடு கடல்சார் வாரியத்திடம் இருந்து ஒரு முன்மொழிவு பெறப்பட்டுள்ளது.

அமைச்சகத்தில் இந்த முன்மொழிவு ஆய்வு செய்யப்பட்டு, ஹைட்ரோகிராஃபிக் சர்வே, புவி தொழில்நுட்ப அறிக்கை, ரயில் மற்றும் சாலை இணைப்பு மேலும், விரிவான தளவமைப்பு விவரங்களுடன், விரிவான திட்ட அறிக்கையை தமிழ்நாடு கடல்சார் வாரியத்திடம் 12.07.2023 அன்று கோரியுள்ளது.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் உள்கட்டமைப்பை மேம்படுத்த ரூ.8 கோடி நிதி உதவியை வெளியுறவு அமைச்சகம் வழங்குகிறது.

இவ்வாறு மத்திய அமைச்சர் சர்பானந்த சோனோவால் எழுத்துப்பூர்வமான பதிலில் தெரிவித்துள்ளார்.

குறு,சிறு தொழில் முனைவோர்களுக்கான கடன் வழங்கும் திட்டத்தில்

## பயனாளிகளுக்கான கடன் தொகை தாமதமாக வழங்கப்படுவது ஏன்?

### மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கேள்வி!



புதுடெல்லி,ஆக.5 -

“குறு,சிறு தொழில் முனைவோர்களுக்கான Credit Linked Capital Subsidy Scheme (CLCSS) எனப்படும் மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டத்தில் பெரும்பாலான பயனாளிகளுக்கு நோடல் ஏஜென்சியிடமிருந்து வங்கியில் துவங்கப்படும் கடன் கணக்கிற்கு கடன் தொகை தாமதமாக செலுத்தப்படுவது ஏன்? தமிழ்நாட்டில் மட்டும் இது குறித்து எத்தனை புகார்கள் எழுந்துள்ளன? 2019 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் இத்திட்டத்தில் பயன் பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு?” என தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த ஒன்றிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை இணையமைச்சர் பானு பிரதாப் சிங் வர்மா அவர்கள் “ குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் CLCSS திட்டத்தின்படி தகுதியான பயனாளிகளுக்கு கடன் கணக்கில் சரியான நேரத்தில் நிதி செலுத்திட நோடல் வங்கிகள் மற்றும் ஏஜென்சிகளுக்கு முறையான வழிகாட்டுதல்கள் வழங்கப்படுள்ளன. அதன்படி ஒதுக்கப்பட்ட நிதி அனுமதிக்கப்பட்டு விடுவிக்கப் பட்டுள்ளது. அதோடு இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள அனைத்துக் குறைகளையும் நிவர்த்தி செய்வதற்காக ‘தி சாம்பியன்ஸ்’ என்ற இணையதளம் 2020 இல் தொடங்கப்பட்டது. இதில் தமிழ்நாட்டில் இதுவரை மொத்தம் 29 புகார்கள் பெறப்பட்டு அனைத்தும் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அதேபோல் இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 2019-20ஆம் நிதியாண்டில் 324 பேரும் 2020-21 ஆம் நிதியாண்டில் 569 பேரும், 2021-22 ஆம் நிதியாண்டில் 68 பேரும் பயனடைந்துள்ளனர்” என்று தெரிவித்துள்ளார்.

சேலம் விமான நிலையத்தில்

## விமானச் செயல்பாடுகளை மேலும் மேம்படுத்த வேண்டும்!

### ஒன்றிய விமானப் போக்குவரத்து அமைச்சரிடம் - சேலம் எஸ்.ஆர்.பார்த்திபன் எம்.பி. கோரிக்கை!



புதுடெல்லி, ஆக. 5-

புதுடெல்லியில், ஒன்றிய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சரைச் சந்தித்து, சேலம் தொகுதி கழக எம்.பி., எஸ்.ஆர்.பார்த்திபன், சேலம் விமான நிலையத்தில் விமானச் சேவைகளை மேலும் மேம்படுத்த வேண்டியது தொடர்பான கோரிக்கைகள் அடங்கிய மனுவினை வழங்கி, அதனை வலியுறுத்தி உரையாடினார்.

அதன் விபரம் வருமாறு:-

ஒன்றிய விமானப் போக்குவரத்துறை அமைச்சர் அவர்களை சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் எஸ்.ஆர்.பார்த்திபன் எம்.பி. சந்தித்து கோரிக்கை மனு அளித்தார்.

அவர் அளித்த கோரிக்கை மனுவில், குறிப்பிட்டுள்ளதாவது:-

உதான் திட்டத்தின் கீழ் சேலத்தில் இருந்து விமான சேவைகளை இயக்க அலையன்ஸ் ஏர் மற்றும் இண்டிகோ ஏர்லைன்ஸ் நிறுவனங்களுக்கு சமீபத்தில் அளிக்கப்பட்ட ஒப்புதலுக்கு எனது பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்து கொள்கிறேன்.

விமானச் சேவை அறிமுகம் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளதால், சேலம் மண்டலத்தில் விமான பயணத்திற்கான தேவை அதிகரித்துள்ளது. சேலம் விமான நிலையத்தில் விமானச் செயல்பாடுகளை மேலும் மேம்படுத்த, பின்வரும் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்:

**சேலம் - சென்னை வழித்தடத்திற்கு ஒப்புதல்:**

சென்னை தமிழ்நாட்டின் தலைநகராக இருப்பதால், சேலம் சென்னை அதிக தேவை இருப்பதால்,இந்த வழித்தடத்திற்கு விமான சேவைகளை தொடங்க உங்கள் ஒப்புதலுக்கு நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.இது ஏராளமான பயணிகளின் பயணத் தேவைகளைப் பூர்த்தி செய்து, பொருளாதார வளர்ச்சியை எளிதாக்கும்.

**கூடுதல் பணியாளர்களை நியமித்தல் :**

விமான சேவைகளின் விரிவாக்கத்துடன்,சேலம் விமான நிலையத்தில் தற்போதுள்ள மனிதவளத்தை அதிகரிக்க வேண்டிய அவசர தேவை உள்ளது. பயணிகளுக்கு தடையற்ற மற்றும் திறமையான சேவைகளை உறுதி செய்வதற்காக,டிக்கெட், பேக்கேஜ் கையாளுதல், பாதுகாப்பு மற்றும் வாடிக்கையாளர் சேவை உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகளை கையாள போதுமான பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

இரவு தரையிறங்கும் மற்றும் இரவு நிறுத்தும் வசதிகள்:

பகல் அல்லாத நேரங்களில் விமானங்களுக்கு இடமளிக்கவும்,விமான அட்டவணையில் அதிக நெகிழ்வுத் தன்மையை வழங்கவும், சேலம் விமான நிலையத்தில் இரவு தரையிறங்கும் வசதிகளை மேம்படுத்துவது குறித்து பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். கூடுதலாக, விமானங்களை இரவில் நிறுத்துவதற்கான ஏற்பாடுகள் விமானத்தின் செயல்பாட்டுத் திறனை பெரிதும் மேம்படுத்துவதோடு, பிராந்தியத்தில் ஒட்டுமொத்த விமானப் போக்குவரத்து நிர்வாகத்திற்கும் பங்களிக்கும்.

**மேம்படுத்தப்பட்ட பயணிகள் வசதிகள்:**

விமானங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால்,சேலம் விமான நிலையத்தில் கூடுதல் பயணிகள் வசதிகளை மேம்படுத்துவது இன்றியமையாதது. இதில் மேம்படுத்தப்பட்ட காத்திருப்பு ஓய்வறைகள், சாப்பாட்டு வசதிகள், ஓய்வறைகள் மற்றும் சிறப்புத் தேவைகள் உள்ள பயணிகளுக்கான அணுகல் ஆகியவை அடங்கும்.வசதியான மற்றும் பயணிகளுக்கு ஏற்ற சூழலை உருவாக்குவது, ஒட்டுமொத்த பறக்கும் அனுபவத்தை மேம்படுத்துவதோடு, விமானப் பயணத்தைத் தேர்வுசெய்ய அதிக நபர்களை ஊக்குவிக்கும்.

இந்த முக்கியமான புள்ளிகளை நிறைவேற்றுவது விமான இணைப்பை அதிகரிப்பது மட்டுமல்லாமல், சேலம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளின் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிக்கும். விமான உள்கட்டமைப்பு வளர்ச்சியுடன், சேலம் விமான நிலையம் நாட்டின் குறிப்பிடத்தக்க போக்குவரத்து மையமாக வளரும்.

மேற்கண்ட கோரிக்கைகளை நீங்கள் ஏற்படுத்தித் தர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.”

இவ்வாறு அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கோரிக்கையை ஏற்று

## சேலம் – செங்கப்பள்ளி வரையிலான நெடுஞ்சாலை 6 வழிச்சாலையாக விரைவில் மாற்றப்படும்!

### இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத் தலைவர் சந்தோஷ்குமார் யாதவ் உறுதி!

நாமக்கல், ஆக. 5-

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி கோரிக்கையை ஏற்று சேலம் முதல் செங்கப்பள்ளி வரையிலான நெடுஞ்சாலை (NH 544) விரைவில் 6 வழிச்சாலையாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய தலைவர் சந்தோஷ்குமார் யாதவ் உறுதியளித்துள்ளார்

சேலம் முதல் செங்கப்பள்ளி வரை, தென்னிந்தியாவில் உள்ள சேலம் கொச்சி நெடுஞ்சாலையின் (NH 544) ஒரு பகுதியாகும். கேரளாவிற்கு உள்நாட்டு வேளாண் மற்றும் கோழி ஏற்றுமதி இந்த நெடுஞ்சாலை வழியாக மட்டுமே கொண்டு செல்லப்படுகிறது. தோராயமாக, 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வணிக வாகனங்கள் (மல்டி ஆக்சில்) மற்றும் அதிகமான உள்நாட்டு மற்றும் பயணிகள் வாகனங்கள் இந்த 103 கிமீ தூரத்தைக் கடந்து கோயம்புத்தூரை அடைகின்றன. 15க்கும் மேற்பட்ட பல்வேறு கல்வி நிறுவனங்கள், கல்வி பணிகளுக்காக தங்களுடைய சொந்த போக்குவரத்து வாகனங்களை இயக்கி வருகின்றன.

நாளுக்கு நாள், இந்த வழித்தடத்தில் போக்குவரத்து அதிகரித்து வருவதுடன், பெரிய விபத்துக்கள் போன்ற பல்வேறு காரணங்களால் வாகனங்கள் தடைபடுவது அடிக்கடி ஏற்படுகிறது. சராசரியாக ஒவ்வொரு வாகனமும் குறைந்தபட்சம் 30 நிமிடம் முதல் 45 நிமிடம் வரை தினமும் இலக்கை அடையச் செலவழிக்கிறது. எனவே இந்த உள்கட்டமைப்பின் தேவைகள் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு தற்போதுள்ள 4 வழிச் சாலையை 6 வழிச் சாலையாக மாற்ற வேண்டும் என தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திடம் (NHAI) நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் கேட்டுக் கொண்டார். இந்த முயற்சி மாசு அளவைக் குறைப்பது மட்டுமல்லாமல், சுமார் 1 லட்சம் லிட்டர் எரிபொருளையும் மிச்சப்படுத்துகிறது. இக்கோரிக்கையினை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய தலைவர் சந்தோஷ் குமார் யாதவ் ஏற்றுக் கொண்டு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்துள்ளார்.



சேலம் முதல் செங்கப்பள்ளி வரையிலான நெடுஞ்சாலை (NH 544) 6 வழிச்சாலையாக மாற்ற வேண்டும் என நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய தலைவர் சந்தோஷ்குமார் யாதவை நேரில் சந்தித்து கோரிக்கை விடுத்தார். அதற்கு அவர், 6 வழிச்சாலையாக மாற்ற விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தார்.